

செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் சி.எம்.டி.ஏ. சார்பில் நேற்று (27.10.2024) தரை தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டு வரும் புதிய காவல் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, போக்குவரத்து ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண் இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் தாம்பரம் காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) சமய், பள்ளிக்கரணை காவல் துணை ஆணையர் ஏ.சி.கார்த்திகேயன் SETC மேலாண் இயக்குநர் ஆர்.மோகன், TNSTC மேலாண் இயக்குநர் கே.குணசேகரன், தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சுபா நந்தினி, போக்குவரத்துக் கழக இணை மேலாண்மை இயக்குநர் எஸ்.நடராஜன், பொது மேலாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம விரைவில் செயல்வடிவம்!


# நிதி ஒதுக்கீடுக்கு மக்களின் குரலாய் ஒலித்த முதல்வர்!

## ‘தினகரன்’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக்.28-

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம செயல்வடிவம் பெறப் போகிறது. கடிதம், கோரிக்கை என்று மக்களின் குரலாய் ஒலித்த முதல்வரின் முயற்சியால் நிதி ஒதுக்கியது ஒன்றிய அரசு என்று தினகரன் நாளேடு 27.10.2024 தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-



தினகரன்

அக்டோபர் 27, 2024 ஞாயிற்றுக்கிழமை

வாழ்த்துகிறது தமிழ்நிலம்

தமிழ்நாட்டில் கடந்த 2007ம் ஆண்டு கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்தபோது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதற்கட்ட பணிகள் தொடங்கியது. மாநில அரசும், அப்போதைய ஒன்றிய அரசும் இணைந்து ₹22,150 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தை நிறைவேற்றியது. 54.1 கிலோ மீட்டர் நீளத்திற்கு 2 வழித்தடங்களில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் நாள் தோறும் 3.10 லட்சம் மக்கள் பயன்பெற்று வருகின்றனர். இதையடுத்து ₹63,246 கோடியில் 119 கிலோ மீட்டர் நீளமுள்ள மேலும் 3 வழித்தடங்களை கொண்ட இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள் 2020ல் தொடங்கப்பட்டது. ஆனால் 3 ஆண்டுகள் முடிந்த பின்னும், அடுத்த கட்டப்பணிகளுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான ஒன்றிய அமைச்சரவை குழு ஒப்புதல் அளிக்கவில்லை. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கான ₹63,246 கோடியில் 5 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் கடந்த 2007ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதற்கட்ட பணிகள் தொடங்கியது. மாநில அரசும், அப்போதைய ஒன்றிய அரசும் இணைந்து ரூ.22,150 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தை நிறைவேற்றியது. 54.1 கிலோ மீட்டர் நீளத்திற்கு 2 வழித்தடங்களில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் நாள் தோறும் 3.10 லட்சம் மக்கள் பயன்பெற்று வருகின்றனர். இதையடுத்து ரூ.63,246 கோடியில் 119 கிலோ மீட்டர் நீளமுள்ள மேலும் 3 வழித்தடங்களை கொண்ட இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள் 2020ல் தொடங்கப்பட்டது.

ஆனால் 3 ஆண்டுகள் முடிந்த பின்னும், அடுத்த கட்டப்பணிகளுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான ஒன்றிய அமைச்சரவை குழு ஒப்புதல் அளிக்கவில்லை. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கான ரூ.63,246 கோடியில் 5 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டது. இதனால் ஒரு கட்டத்தில் மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் அறவே முடங்கியது. இதற்குரிய நிதியை ஒன்றிய அரசிடம் இருந்து பெறுவதற்காக இதுவரை 8 முறைக்கு மேல் கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின். பிரதமரை சந்திக்கும் நிகழ்வுகளிலும் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதியை ஒதுக்கித்தர வேண்டும் என்பதே அவரது பிரதான கோரிக்கையாக இருந்தது.

திட்டமதிப்பில் 70 சதவீதத்தை பன்னாட்டு வளர்ச்சி வங்கிகளிடம் கடனாக பெறலாம். மீதமுள்ள 30 சதவீத்தை ஒன்றிய, மாநில அரசுகள் தலா 15 சதவீதம் என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளலாம். அதன்படி சென்னை மாநகரின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசிடமிருந்து குறைந்த நிதியைத்தான் கேட்கிறோம் என்றும் தெளிவான விளக்கம் அளித்தார் முதல்வர். இதன் எதிரொலியாக மெட்ரோ இரண்டாம் கட்டத்திற்கான நிதியை தற்போது முழுமையாக ஒதுக்கியுள்ளது ஒன்றிய அரசு. அதனால் பணிகள் வேகமாக நடந்து வருகிறது.

இந்நிலையில் நேற்று சென்னை நந்தனத்தில் உள்ள மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமையகத்தில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் ஆய்வு கூட்டம் நடந்தது. இதில் பங்கேற்ற முதல்வர், “மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல்கட்டம் செயல்படுத்தப்பட்ட அதே முறையில் இரண்டாவது கட்டப்பணிகளும் செயல்படுத்தப் பட வேண்டும் என்று நான் பல முறை வலியுறுத்தினேன். இதனை ஏற்று அதற்கான ஒப்புதலை அண்மையில் அளித்துள்ளார் பிரதமர். அவருக்கும் ஒன்றிய அரசுக்கும் முதற்கண் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோல மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் பிரதமர் நிதி ஒதுக்க வேண்டும், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது கட்டத்திற்கான பணிகளை விரைந்து செயல்படுத்துமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தி உள்ளேன்,” என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை, மாநிலத்தின் இதயமாகவும் திகழ்கிறது. பலகோடி மக்களை வாழ வைக்கும் சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் என்பது ஒரு காலத்தில் பெரும்சவாலாக இருந்தது. இதற்கு தீர்வு காணும் வகையில் கடந்த 2016ம் ஆண்டு மெட்ரோ ரயில் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. இதனால் போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறைந்தது. அதேநேரத்தில் பெருகி வரும் வளர்ச்சி, மக்கள் நெருக்கம், கட்டமைப்பு வசதிகளை கருத்தில் கொண்டு இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டமும் விரைவில் செயல்வடிவம் பெறப்போகிறது. கடிதம், கோரிக்கை என்று மக்களின் குரலாய் ஒலித்த முதல்வர் நிதி ஒதுக்கிய ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார். ஆனால் முதல்வரின் சீரிய முயற்சியை பாராட்டி அவருக்கு நன்றி தெரிவித்து வாழ்த்துகிறது தமிழ்நிலம் என்பதே நிதர்சனம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# முதலமைச்சர் கோப்பை: மாநில அளவிலான கேரம் இறுதிப் போட்டி!

## மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் இணையர் வெற்றி!

சென்னை, அக்.28-

அரசு நிறுவனங்களுக்கு இடையேயான மாநில அளவிலான கேரம் இறுதிபோட்டி மின் கழகத் தொ.மு.ச பொதுச் செயலாளர் பா.மணிமாறன் இணையர் தங்கப்பதக்கம் வென்றனர்.

தமிழ்நாடு மாநில அளவிலான, அரசு நிறு வனங்களுக்குள், முதலமைச்சர் கோப்பை 2024க்கான, அனைத்து பிரிவு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

இதில் 38 மாவட்டங்கள் கலந்து கொண்டனர். சென்னை மாவட்டத்தின் சார்பில், கேரம் இரட்டையர் பிரிவில் மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் பா.மணிமாறன் இணையர் வெற்றி பெற்று இறுதி போட்டியில் நுழைந்தார் கள்.

கேரம் இரட்டையர் பிரிவு போட்டி 21,22,23 தேதிகளில் திருச்சியில் உள்ள அண்ணா உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இறுதி போட்டியில் சென்னை மாவட்ட அணியுடன், திருச்சி மாவட்ட அணி களம் கண்டது. பரபரப்பான இறுதி போட்டியில் சென்னை மாவட்ட அணியின் சார்பாக களம் கண்ட பா.மணிமாறன், மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச்சங்க மாநில பொதுச்செயலாளர் / இணைப் பொதுச்செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச்சங்க பேரவை மற்றும் ரா.தனசேகரன், திட்டத் துணைச் செயலாளர் / சென்னை மின்பகிர் மான வட்டம் /தெற்கு1 மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க இணையர் வெற்றி பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் விதமான திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி இளைஞர் நலன் / விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு துணைமுதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக நடைபெற்ற விளை யாட்டு போட்டியில் கேரம் இரட்டையர் பிரிவு இறுதி போட்டியில் வென்ற, பா.மணிமாறன் மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச்சங்க மாநில பொதுச் செயலாளர் இணைப் பொதுச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச்சங்க பேரவை மற்றும் ரா.தனசேகரன், திட்டத் துணைச்செயலாளர் / சென்னை மின்பகிர்மான வட்டம் /தெற்கு1 இணையருக்கு தங்கப்பதக்கம், பாராட்டு சான்றிதழ் மற்றும் 1.5 இலட்சம் பணமுடிப்பு, திருச்சி மாவட்ட ஆட்சியர் வழங்கினார்கள்.




இராயபுரம் ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனைக்கு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தொடர் முயற்சியால் மெட்ராஸ் ரோட்டரி கிளப்பின் சமூக பொறுப்பு நிதி (CSR) மூலம் ரூபாய் 60 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு ஆம்புலன்ஸ்களை சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.,இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் மருத்துவமனை நிர்வாகத்திடம் ஆம்புலன்ஸ்களை அர்ப்பணித்தார். இந்நிகழ்வில் இராயபுரம் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வ.பெ.சுரேஷ், இராயபுரம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் இரா.செந்தில்குமார், ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை கண்காணிப்பாளர் திருமதி.சாந்தி இளங்கோவன் மருத்துவர்கள், செவிலியர்கள்,வட்ட செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# “விண்ணும், மண்ணும் வாழ்த்திய போர்க்கால பணி”





வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை வெள்ளத்தடுப்பு பணிகளை விரைந்து, ஒரு நொடிப்பொழுதும் வீணடிக்காமல், மழையின் களத்தில் கால்பதித்து, இயற்கையும் எட்டிப் பார்த்தது ஓடும் வகையில், மின்னலை மிஞ்சும் வேகத்தில் முதலமைச்சர் அவர்கலோடு பணியாற்றிய துணை முதலமைச்சரை மக்களும் பத்திரிகைகளும் வெகுவாக பாராட்டி வருகிறார்கள்,

2021ல் ஆட்சி பொறுப்புக்கு வரும்போது கொரோனா என்னும் பெரும் தொற்று தமிழ்நாட்டில் பரவி இருந்தது, நோய் தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு, களத்தில் இறங்கி மக்களை சந்தித்து ஆறுதல் படுத்தியதோடு, தைரியமாக கொரோனா வார்டில் நுழைந்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதை நினைவூட்டி பாராட்டி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் 30.9.2024 அன்று வடகிழக்கு பருவ மழையையொட்டி மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஆலோசனை கூட்டத்தில், வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன்னரே வெள்ள தடுப்பு பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பை தடுத்திட வேண்டும் என்றும், கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை சுட்டிக்காட்டியும், வானிலைமாற்றம், பொழியும் மழையின் அளவு போன்ற விவரங்களை மக்கள் தமிழில் அறிந்து கொள்ள TNAlert என்ற கைபேசி செயலி உருவாக்கியும், நீர் நிலைகளை கண்டறிதல், நீர் வழித்தடங்களில் மழைநீர் தடையின்றி செல்லும் வகையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏரி குளங்களை தூர்வாரியும், மின்சாரம் தடையின்றி கிடைக்கவும், பாதுகாப்பான குடிநீர், பால், உணவு பொருட்கள் கிடைக்கவும், நோய் தொற்று ஏற்படாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

மேலும், பேரிடர் காலப்பணிகளில் தன்னார்வலர்களை ஈடுபடுத்தவும், மாணவர்களின் பாதுகாப்பு, முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள் பாதுகாப்பு, மீனவ குடும்பங்கள் பாதுகாப்பு, வேளாண் மற்றும் கால்நடை பாதுகாப்பு என அனைவரையும் பாதுகாத்திடவும், எந்த ஒரு சூழ்நிலையிலும் உயிரிழப்பும் ஏற்பட்டு விடக்கூடாத அளவிற்கு விரைந்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி, நடவடிக்கைகள் மேற்கொண்டது மன்னன் வாழ்ந்தான், மக்கள்வாழ ஆட்சி புரியும் மன்னன் வாழ்கிறான், வான்புகழ மன்னன் வாழ்கிறான், இனிவரும் காலமும் வாழ்த்தும் பணியாக இருக்கும் என்ற தைரியம் மக்களுக்கு பிறந்தது,

மேலும், முதலமைச்சர் அவர்கள் கூறும்போது, முன்பெல்லாம் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு என இரண்டு பருவ மழை கிடைத்தது, தற்போதைய கால நிலை மாற்றத்தால், பருவ மழை காலத்திற்கான மொத்த மழையும் ஒரு சில மணி நேரங்களிலேயே கொட்டி தீர்த்து விடுகிறது, இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என தெரிவித்து, மக்களுக்கு சிறிதளுவும் பாதிப்பும் ஏற்படாத வகையில் அமைச்சர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தியது தாய் தன் கருதரித்தலை காப்பது போல் அனைத்து மக்களையும் காப்பாற்றும் தாய்மையை உணர்த்தியது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சி பிரதிநிதிகளும் களத்தில் நின்று பணியாற்ற ஆலோசனை வழங்கிய முதல்வர் அவர்கள், கழகத்தினரும் இப்பணியில் ஈடுபடுவதோடு, மக்களுக்கு வேண்டிய அவசர, அவசிய உதவிகள் செய்வதோடு, அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கவும் உதவிட அறிவுறுத்தியது கழகத்தினரை மிகவும் உற்சாகமடைய வைத்தது, தளபதியின் உத்தரவை எதிர்பார்த்து கழக வீரர்கள் வில்லில் இருந்து பாய்ந்த அம்புகளாய் களத்தில் காணப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, சமத்துவபுரம் தந்த கலைஞர் அவர்களின் வழித்தோன்றலாய், தலைமுறை தலைமுறையாய் சமத்துவபுரம் தரும், தலைவர்,தமிழக முதல்வர், தளபதி அவர்களின் வழியாய், சமாதானம் இன்றி சனாதனம் ஒழிப்பு கோட்பாட்டை பேசியும், செங்கல்லை தூக்கி செங்கோலை பிடித்து இருக்கும் திமுக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சர் தலைமையில் 5.10.2024 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளுவர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நடைபெற்று வரும் வெள்ளை தடுப்பு பணிகளை விளக்கி கூறினார்.

தொடர்ந்து மழை நீர் வடிகால்களை சீரமைப்பது, வெள்ளம் வடியும் கால்வாய்களை தூர்வாரவும், ஆகாய தாமரைகளை உடன் அகற்றவும், தாழ்வான பகுதிகள், மழை நீர் தேங்கும் இடங்களில் உடன் மழைநீரை அகற்ற தேவையான அளவு மோட்டார் பம்புகள், நீர் உறிஞ்சி வாகனங்கள், மோட்டார் படகுகள், ஜெனரேட்டர், மரம் வெட்டும் இயந்திரங்கள் மற்றும் பாதுகாப்பு மையங்கள் என தயார் நிலையில் வைத்திருக்கவும், மழைநீர் அதிகமாக தேங்கும் இடங்களில் அருகாமையில் சமையல் கூடங்கள் அமைத்து உணவு சமைத்து வழங்கிடவும், பால், பிரட்பாக்கெட் தயார் நிலை வைத்திருக்கவும், பாதுகாப்பான குடிநீர் வழங்கவும், வாட்ஸ்அப் குழுக்கள் அமைத்து தகவல் சேகரிப்பு செய்து மக்கள் காப்பாற்றப்பட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

அத்துடன் மேற்கூறப்பட்ட அனைத்தும் சரியாக உள்ளனவா என நிலைகளை ஆய்வு செய்து 13.10.2024ல் கனமழையை எதிர்கொள்ள தயார் என இயற்கையை எதிர்த்து துணை முதலமைச்சர் அவர்கள் செய்தி வெளியிட்டது மக்களுக்கு வியப்பாகவும், ஆறுதலாகவும் இருந்தது,

மேலும், பொதுமக்களுக்கு பிரத்யோக உதவி எண்ணாக 1913 வழங்கி கட்டுப்பாட்டு அறையும் உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டதுடன், கூடுதலாக 13,000 தன்னார்வல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டனர், 100 குதிரை திறன் கொண்ட மோட்டார்கள், மின்சார கேபிள்களால் ஏற்படும் ஆபத்துகளை அறிந்து அதனை உடனுக்குடன் சரி செய்ய மின்களப் பணியாளர்கள் என தயார் நிலையில் இருந்தனர்.

மேலும், மின்சாரத்துறை, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்துறை, மீட்புக் குழு, காவல்துறை, தீயணைப்பு துறை, வருவாய்த்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித்துறை பொதுப்பணித் நீர்வளத்துறை, வேளாண்துறை, கால்நடைதுறை மற்றும் வருவாய் துறையினர் என முழுநேர பணியாக பணி புரிய அறிவுறுத்தப்பட்டு அனைத்து துறை அலுவர்களும், பணியாளர்களும் தயார் நிலையில் இருந்தனர்.

மேலும், 14.10.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பணியாற்றிட முதலமைச்சர் அறிவுறுத்தியவாறு, துணை முதலமைச்சர் அவர்களின் களப்பணி வியப்பை தந்தது, முதல்முறையாக சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், துணை முதலமைச்சர் என அனுபவம் இல்லாத பணிகள், ஆனால், அனுபவ அரசியல்வாரிசு அல்லவா, களப்பணிகள் மூலம் அனுபவமிக்க அரசியல்வாதியாக பணி ஆற்றினார், இந்நிலையில், மாற்றுக் கட்சி அரசியல் வாரிசுகள் என்ன செய்கிறார்கள் என்று கூகுளில் தேடிப் பார்க்கும் அளவிற்கு இருந்தது,

15.10.2024 கனமழை பெய்ததை கொட்டும் மழையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தும், ஆய்வின் போது தூய்மை பணியாளர்களுடன் கலந்துரையாடி அவர்களுடன் அமர்ந்து தேநீர் அருந்தியது பணிகளுக்கு ஊக்கமாய் அமைந்தது மட்டுமல்லாது களப்பணியில் இருந்த அலுவலர்களுக்கும் உற்சாகமாய் இருந்தது.

துணை முதல்வர் அவர்கள் 15.10.2024 அன்று அவசரக்கால கட்டுப்பாட்டு மையத்தை ஆய்வு செய்தும், சென்னை முழுவதும் போர்க்கால அடிப்படையில் நிவாரண பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியதோடு, பல்வேறு இடங்களில் மழையில் நனைந்தவாரே, வெள்ளப் பேரிடர் கால பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி மின்னல்வேக பேரிடர் காலப் பணியாற்றியதை கண்டு மக்கள் வியக்கும்படி இருந்தன, வெள்ள நிவாரண பணிகளில் எங்கு பார்த்தாலும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர்கள், நகர மன்றதலைவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் என சுற்றித்திரிந்து பணியாற்றினார்கள்.

கீழ்கட்டளை, பள்ளிக்கரணை எஸ்.கொளத்தூர் ஆகிய பகுதிகளில் முழு நேரமாக துணை முதல்வர் தலைமையில் ஆகாயத் தாமரையை ஒரே நாளில் அகற்றப்பட்டது, கனமழையில் மின்னல் வேக நிவாரணப்பணி, நடவடிக்கை என பத்திரிகைகளும், பொது மக்களும் பாராட்டி வருகின்றனர், தொடர்ந்தும் பாராட்டி வருகிறார்கள், இவ்வாறான நிவாரண பணியிலும் துணை முதல்வர் அவர்களுக்கு சமூக வலைத்தளங்கள் மூலமாக வரும் புகார்களையும் உடன் ஆய்வு செய்து அவர்களின் கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றி வந்ததும் பாராட்டப்பட்டு வருகிறது,

இப்பணிகளின் போது நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களும் இளைஞரோடு இளைஞராக இணைந்து, முதிர்ந்த அனுபவத்தோடு முன்னின்று பணியாற்றியது திமுகவின் மிகப்பெரிய பலம் ஆகும்.

இந்தியாவில் பேரிடர் காலத்தில் இத்தகைய மீட்பு பணிகளை இவ்வளவு துரிதமாக நடைபெற்றது இல்லை என போற்றும் வகையில், தலைமுறை தலைமுறையாய் சமத்துவபுரம் தரும் தலைவர், தமிழக முதல்வர், தளபதி அவர்களையும்சமாதானம் இன்றி சனாதன ஒழிப்பு கோட்பாட்டை பேசியும், செங்கல்லை தூக்கி, செங்கோலை பிடித்து இருக்கும் திமுக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களை விண்ணும் வாழ்த்தியது, மண்ணும் வாழ்த்துகிறது.

**வேலூர் த.சௌந்தர்**